திரு. எஸ். குணசேகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆத்தூர் தாலுகாவின் மையப் பகுதியாகும். தற்போது அங்குள்ள விடுதிகளில் மாணவர்களுக்குப் போதிய வசதி இல்லை. மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தி கூடுதல் கட்டிடம் கட்டித் தருவதற்கு இனி மேலாவது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று வரும் நிதி ஆண்டில் அரசு விடுதி அமைக்க அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

குறிச்சி ஆதி திராவிட நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம்.

* 3432 திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகை வட்டம், குறிச்சியில் உள்ள ஆதி திராவிட நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) முக்கியத்துவம், அவசியம் மற்றும் நிதி ஒதுக்கீடு வசதியைப் பொறுத்து அரசு நடவடிக்கை எடுத்து பணியை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியத்துவம் கருதி பணி மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கிராமப் புறத்தில் இருக்கக் கூடிய ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு மற்றவர்களிடமிருந்து வாடகைக் கட்டிட வீடுகள் கிடைப்பது என்பது எந்த அளவுக்குச் சாத்தியமற்றது என்பது அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எனவே அப்படி அந்தக் கிராமப்புறத்தில் இருக்கக் கூடிய மாணவர் விடுதி இப்போது தனியார் கட்டிடத்தில் இருப்பதனால் பெரும்

1990 ஏப்ரல் 5]

சிரமம் இருக்கிறது. அதற்காக சில இடங்களில் கூட நிலம் கையகப்படுத்தப்பட்டு அந்த வேலைகள் முடியப் பெற்று இருக்கிறது. அதை இந்த நிதியாண்டில் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வரும் நிதி ஆண்டில் 100 மாணவ-மாணவியர் விடுதிகள் ஆரம்பிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறது. எங்கெங்கெல்லாம் அவசியமான தேவைகள் இருக்கின்றனவோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையிலே அரசு விடுதிகளைக் கட்டிக் கொடுக்க முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு நிதி ஆண்டிலே 100 மாணவர் விடுதிகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு மாணவர் விடுதிக்கு 17 இலட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று திட்ட மதிப்பீடு சொல்கிறது. அவ்வளவு பெரும் தொகையில் கட்டப் படக் கூடிய அந்தக் கட்டிடங்கள் சில இடங்களில் பயனற்றுக் கூட இருப்பதை நான் பார்த்து இருக்கிறேன். எனவே, அந்தக் கட்டிடங்கள் 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படுமே யானால் 100 விடுதிகள் என்பது 300 விடுதிகள் கட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இதைக் கருத்தில் கொண்டு ஒரு விடுதிக்கு 17 இலட்சம் ரூபாய் வேண்டும் என்பதைக் குறைத்து அந்த மாணவர்களினுடைய தேவைக்கு ஏற்ற முறையில் விடுதி களைக் கட்ட அரசு முன்வந்து, கூடுதல் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாணவ, மாணவியர்களின் விடுதி களின் எண்ணிக்கை குறைந்த பட்சம் 50 விகிதாச்சாரத்தில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா.

* 4669 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப்புறக்கரை, 2-வது வார்டு நண்டுவெட்டி தெரு ஆதி